**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை

எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஏனைய வருமான உழைப்புக்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,102,672 செலவினம் வாழைக் கன்றுகள் விற்பனை வருமானம் கணிப்பிடும் போது குறைக்கப்பட்டதன் காரணமாக வாழைக் கன்றுகள் விற்பனை மொத்த இலாபம் மற்றும் ஏனைய உழைக்கப்பட்ட வருமானம் அப்பெறுமானத்தால் முறையே குறைத்தும் மற்றும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய சோயா அவரை மற்றும் மஞ்சல் உற்பத்தி வருமானம் காணப்படாதிருந்ததுடன் அந்த செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்டிருந்த செயற்பாட்டு நட்டம் சரியாகக் காண்பிப்பதற்காக அந்த உற்பத்தி செலவினம் மொத்த இலாபத்தில் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. | வருமானங்களுக்குரிய செலவினம் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மஞ்சல் கன்று உற்பத்தி தோல்வியடைந்ததன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட ரூபா 324,030 கிரயம், நிதிசார் செயலாற்றல் கூற்றில் நட்டமாக பதிவழிப்பதற்கு பதிலாக வாழைக் கன்று உற்பத்தி கிரயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 இன் நிதி ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானங்களுக்குரிய செலவினங்கள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் பெறவேண்டிய வட்டி மாற்றங்களாக ரூபா 1,206,307 காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த வேறுபாடு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய வட்டி மாற்றங்கள் ரூபா 1,411,433 முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் காசுப் பெறுவனவுகளில் சீராக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் உயிரியல் இருப்பு விற்பனை மற்றும் கொள்வனவுகள் முறையே ரூபா 2,569,375 மற்றும் ரூபா | மீளாய்வாண்டில் உயிரியல் கையிருப்பு விற்பனை ரூபா 1,388,880 ஆக இருந்ததுடன் கொள்னவுகள் | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு வெளிச்செல்லல் மற்றும் உற்பாய்ச்சல் |

| | | | |
|---|---|---|---|
| | 755,580 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உற்பாய்ச்சலின் கீழ் ரூபா 738,683 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 755,580 ஆகும். அதனால் தேறிய பெறுமதி ரூபா 633,300 ஆக இருந்ததுடன் ரூபா 105,383 வேறுபாடு மாத்திரம் காண்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக இனங்காணப்படல் வேண்டும். |
| (உ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் வருமான பெறுமாத் தேய்வு ரூபா 38,355,138 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியல்லா கொடுக்கல் வாங்கல்களின் கீழ் ரூபா 38,903,339 ஆக காண்பிக்கப்பட்டமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 548,201 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 இன் நிதியாண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லா கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்க்பபடல் வேண்டும். |
| (ஊ) | நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் பெறுமானத்தேய்வு ரூபா 139,346 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி யல்லா கொடுக்கல் வாங்கல்கள் சீராக்கலின் கீழ் அப்பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 இன் நிதியாண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லா கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 559,690 கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் பணம் தொடர்பாக இறுதி அறிவித்தல் அறிவித்து 2023 திசம்பர் 15 ஆம் திகதி கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. | கடன் தவணைகளை அறவிடுவதற்கு முறையான திட்ட முறைமையொன்று ஸ்தாபித்து அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்திற்குரிய சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு | இந்தப் பணத்தை அறவிடல் தொடர்பாக மீள் | மேலதிகமாக செலுத்தப்பட்ட மற்றும் |

| | | |
|---|---|---|
| வழங்கியதால் கிடைக்க வேண்டியயிருந்த ரூபா 50,700 மற்றும் ஊழியர்கள் அகற்றப்பட்டு 07 ஊழியர்களுக்கு பல்கலைக்கழக சேவையிலிருந்து விலகிய 07 ஊழியர்களுக்கு பல்கலைக்கழக சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியமாக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 91,352 கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 13 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நினைவூட்டல் கடிதம் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. | பெறவேண்டிய பணம் அறவிடப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரமின்றி மிகைப் பணம் ரூபா 12,199,800 ஆன 11 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிதிக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீட்டுக் கொள்கையொன்று ஸ்தாபிக்கப்படும். | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் மிகைப் பணம் முதலீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 1995 யூலை 14 ஆம் திகதிய இலக்கம் 636 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற 35 பரீட்சைகளுக்குரிய பெறுபேறுகளை விநியோகிப்பதன் தாமதகாலம் 36 நாட்கள் முதல் 424 நாட்கள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்தது. | தற்போது குறித்துரைத்த காலத்தில் பெறுபேறுகள் விநியோகிக்கப்படுகின்றது. | பரீட்சை பெறுபேறுகள் குறித்துரைத்த காலத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | நிறுவனத்தின் கல்விசார் பதவியணியினருக்காக வருகை பதிவேடொன்று பேணிச்செல்லல் அல்லது விரிவுரை கால அட்டவணையேனும் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | தற்போது பேணிச்செல்லப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்திற்குரிய செயல் வழிக்கோவையின் 4(ஒ) பிரிவு | நிறுவனத்தின் நூலக வசதி பேணிச் செல்லப்படாதிருந்தமையின் காரணமாக நன்கொடையாகக் கிடைத்த 1150 புத்தகங்கள் மற்றும் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 643,498 பெறுமதியான 162 புத்தகங்கள் என்பன 05 வருட காலம் முதல் மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்க முடியாதிருந்தது. | தற்காலிக அடிப்படையில் நூலக உதவியாளரையேனும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புத்தகங்களை பயன்படுத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,727,988 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,487,028 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,759,040 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏனைய மானியங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் முக்கிய பகுப்பாய்வு

2.2.1 கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கன்று விற்வனை வருமானம் ரூபா 10,158,258 முதல் ரூபா 26,574,015 வரை 161 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதும் விற்பனை கிரயம் ரூபா 20,081,634 முதல் ரூபா 23,299,336 வரை 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் மொத்த நட்டம் ரூபா 9,923,376 முதல் இலாபம் ரூபா 3,274,697 வரை 133 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2.2.2 கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் ரூபா 51,335,480 முதல் ரூபா 93,364,270 வரை 81 சதவீதத்தாலும், வட்டி வருமனம் ரூபா 1,820,310 முதல் ரூபா 2,650,050 வரை 45 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா

101,421,000 முதல் ரூபா 69,000,000 வரை 32 சதவீத்தாலும், ஏனைய மீண்டெழும் செலவினம் ரூபா 24,028,431 முதல் ரூபா 21,854,655 வரை 09 சதவீத்தினாலும் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 1.9 முதல் 3.4 வரையும், விரைவு விகிதம் 1.3 முதல் 2.6 வரையும் அதிகரித்தமையினால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நிறுவனத்தின் திரவத்தன்மை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திசு வளர்ப்புகூடப் பகுதியைப் பிரிக்கும் வேலைகளுக்குரியதாக செலுத்தும் பட்டியலில் இரண்டு விடயங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகளை விஞ்சி ரூபா 944,623 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடு தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டிட விலை எண்ணிக்கைகளுக்குரிய காலம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தில் இருந்து உரிய தகவல்கள் பெற்று சமர்ப்பிக்கப்படும். | மதிப்பீடு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட விலைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு செய்யப்பட்ட சிவில் வேலை பெறுமதி ரூபா 5,085,876 ஆன சுயமாக நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் கைத்தொழில்கள் நேர் ஊழிய அடிப்படையில் நிறைவேற்றப் பட்டிருந்ததுடன் 2023 யூலை 04 ஆம் திகதி வரையும் ரூபா 6,193,291 நிர்மாணக் கிரயம் செலவிடப்பட்டிருந்தமையினால் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1,107,415 அதிகரித்து செலவிடப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணங்களுக்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கும் போது சகல கிரயங்களும் (பொருட்கள் ஊழியம் மற்றும் ஏனையவை) கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | கிரயம் மதிப்பீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசம்பர் 31 வரை விவசாய தொழில் நுட்பவியல் பட்டப் பாடநெறிக்காக சேர்க்கப்பட்ட 268 மாணவர்களின் 100 மாணவர்கள் அதாவது 37 சதவீதம் பட்டப்பாடநெறியைப் பூர்த்திசெய்திருக்கவில்லை. | பணம் அறவிட்டு மேற்கொள்ளப்படுகின்ற பட்டப்பாடநெறிகளாக இருந்ததுடன் இடைநடுவில் பாடநெறிகளை விட்டுச்செல்லும் அளவிற்காக தாக்கமளித்த பிரதான காரணம் பணம் செலுத்துவதற்குள்ள வசதியீனம் ஆகும். | பாடநெறிகளை பூர்த்தி செய்யாதிருப்பதற்கான காரணத்திற்காக தீர்வு வொன்றை வழங்குவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | பாடநெறி கட்டண பதிவேட்டின் பிரகாரம் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி கற்கின்ற 1048 மாணவர்களில் 145 பேர் பதிவுசெய்யும் விண்ணப்பங்களை நிருவாகப் பிரிவிற்கு அனுப்பியிருக்க வில்லை. | நிறுவனம் தற்போது Student Information System (SIT) அலகொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் தாமதமின்றி மாதாந்த பணத்தை செலுத்துதல் மற்றும் பதிவு செய்தல் ஒரே தடவையில் மேற்றொகள்ள முடியும். | மாணவர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக முறையான திட்டமொன்று ஸ்தாபித்து அமுல்படுத்துதல் வேண்டும். |
| (உ) | கல்வி நடவடிக்கைகளுக்குரிய 2022 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 25 பரீட்சைகளுக்காக 2600 மாணவர்கள் பங்குபற்றி இருந்ததுடன் 1141 பேர் சித்தி யடைந்திருக்கவில்லை.<br>அதன் பிரகாரம் பரீட்சையில் சித்தியடையாமையின் சதவீதம் 12 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | இந்த மாணவர்கள் விவசாய பிரிவு தொடர்பாக அவர்கள் தொடர்பானவர்கள் மற்றும் உயர்தரப் பரீட்சையில் Z பெறுமதியின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு உள்ளீர்க்க முடியாதிருந்தமையினால் சித்தியடையாத சதவீதம் ஆரம்ப கல்வி ஆண்டுகளில் அதிகரித்து பின்னர் படிப்படியாக இது குறைவடைந்துள்ளது. | பரீட்சையில் சித்தியடையாத சதவீதத்தைக் குறைத்துக் கொள்வதற்கு முறையான திட்ட முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய இலக்கம் UGC/IDD/GEN/10 (07) என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதத்தின் பிரகாரம் நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்ற 50 ஏக்கர் காணி சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு தவறியிருந்ததுடன் அந்த காணிகளின் நிர்மாண | காணி ஆணையாளர் திணைக்களத்தால் அறிவித்தல் வழங்கிய பிரகாரம் மீண்டும் ஒரு தடவை அதாவது 2024 மார்ச் 07 ஆம் திகதி 50 ஏக்கர்களுக்குரிய வாடகை உடன்படிக்கை நிறுவனத்தால் கைச்சாத்திடப்பட்டுள்ளது. | காணியின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6,404,534 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (எ) | பண்ணையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முறையான மதிப்பீடொன்று தயாரித்து தேவையான இயந்திர மணித்தியால அளவை இனங்காணாமல் மீளாய்வாண்டிலும், முன்னைய ஆண்டிலும் 02 சந்தர்ப்பங்களின் போது பெகோ இயந்திரம் வாடகையின் அடிப்படையில் பெறப்பட்டு 152 இயந்திர மணித்தியாலங்களுக்காக மணித்தியாலயம் ஒன்றுக்கு ரூபா 6,500 வீதம் ரூபா 988,000 வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 மற்றும் 2023 மாவட்ட விலைக்குழுவின் பிரகாரம் இயந்திர மணித்தியாலயத்திற்காக செலுத்த வேண்டிய ஆகக்கூடிய கட்டணத்தை விஞ்சி ரூபா 198,700 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 140 இயந்திர மணித்தியாலங்களுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் பிரயோக ரீதியில் இடம்பெறுகின்ற முரண்களின் காரணமாக 12 இயந்திர மணித்தியாலங்களுக்காக உரிய அங்கீகாரம் பெற்று கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நேர் முறைமையில் நிறைவேற்றப்படுகின்ற வேலைகளுக்காக கிரய மதிப்பீடு தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |